## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No.254/2015**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 24.02.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்வராஜ் Father's Name : நாராயணன்

துவக்க நேரம் :12.16P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) இந்த வழக்கின் வாதி கலியன் அவர்களுக்கு நத்தம் ச.எண்.166/12 ல் உள்ள சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்திற்கு வடக்கே என்னுடைய சொத் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்திற்கு கடந்த 2011, 2012, 2014 ஆகிய ஆண்டுகளுக்கு சொத்து வரி செலுத்தியுள்ளேன் என்றால் ஆமாம்.

2) என்னுடைய தாயார் கடந்த 2021-ஆம் ஆண்டு காலமானார் என்றால் சரிதான். கடந்த 2011, 2012, 2014 ஆகிய வருடங்களில் என்னுடைய பெயரில்தான் வரி செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வரி ரசீதுகள் பி.வா.சா.ஆ. 5, 10 என்றால் சரிதான். இந்த பி.வா.சா.ஆ.5, 10 ஆகிய ஆவணங்கள் இரண்டும் எனக்கு சொத்தில் உரிமை உள்ளதால்தான் நான் என் பெயரில் வரி செலுத்தி உள்ளேன் என்றால் சரிதான் **(**இது சாட்சியின் விளம்புகை பாரிகாரத்திற்கான வழக்கு அல்ல எனவே**,** இந்த கேள்வி முன்வைக்க முடியாது என ஆட்சேபனைக்கப்பட்டது**.** ஆட்சேபனையுடன் இந்த கேள்வி பதிவு செய்யப்படுகிறது**).**

3) இந்த வழக்கில் எனக்கு எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால், ஏன் எனது தாயாரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க மனு செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு விவரம் தெரியாது. கடந்த 2015 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் எனது தாயார் 2021-ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றாலும் இதற்கிடையில் எனது தாயார் இந்த வழக்கில் ஏதேனும் மனு தாக்கல் செய்து தரப்பினராக ஏற்றுக்கொண்டாரா என்றால் இல்லை.

4) நான்தான் வாதியின் சொத்தில் வடபுறம் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல, வாதிக்கு சொந்தமான சொத்தின் எந்த திசையில் எனது மாடிவீடு உள்ளது என்றால் வாதியின் கலியன் வீட்டிற்கும் தெற்கில் கோவில் நிலம் உள்ளது. அதற்கும் தெற்கில் எனது மனைவி பெயரில் உள்ள மாடிவீடு உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் வாதி வீட்டிற்கு சேர்ந்தாற்போல் எனது மாடிவீடு உள்ளது என்றாலும் அதிலிருந்து SLAP வழியாக வாதியின் வீட்டின் மீது விழுந்து சேதம் ஏற்படுவதால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி வீட்டிற்கும், எங்கள் வீட்டிற்கும் உள்ள இடைவெளி 15 அடி உள்ளது. மழைநீர் எனது வீட்டின் மேலிருந்து வீதியில்தான் விழுகிறது.

5) எனது தாயார் பெயரிலுள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 166/11 ஆகும். எனது மனைவி பெயரில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால், எனக்கு தெரியாது. எனது மனைவி பெயரில் உள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியும் என்றாலும் அந்த சர்வே எண்ணை தற்பொழுது சொன்னால் நான் மேற்சொன்ன சாட்சியம் பொய்யாகிவிடும் என்பதால் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) வாதியின் சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்தும், வாதி சொத்தை வாதியின் வீட்டின்மீது தண்ணீரை கொட்டி நான் சேதப்படுத்தியதால்தான் வாதி இந்த வழக்கை எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கோவில் நிலம் எதையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7) எனது மனைவி ஊராட்சி மன்ற தலைவர் என்றால் சரிதான். அவர் முன்னால் ஊராட்சி மன்ற தலைவர். எனது மனைவி ஊராட்சி மன்ற தலைவர் என்பதால் அதிகாரத்தை பயன்படுத்தி நான் ஆக்கிரமிப்பு செய்து இடைஞ்சல் செய்தும் மழைநீர் வாதியின் சொத்தில் ஊற்றி சொத்தை வீணாக்கி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

8) இவ்வழக்கின் வாதி சொத்தில் மாதிரி வரைபடம் தயார் செய்து இவ்வழக்கில் குறியீடு செய்துள்ளார் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3-ல் வாதி மாதிரி வரைபடம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. வாதி அவர் பெயரில் உள்ள UDR பட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

9) நான் எனது தாயாருடைய சொத்திற்கும், மனைவியுடைய சொத்திற்கும் UDR பட்டா ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் UDR பட்டா தாக்கல் செய்யவில்லை, பட்டா தாக்கல் செய்துள்ளேன். வாதி தாக்கல் செய்துள்ள UDR பட்டாவில் சொத்தின் அளவுகள் தெளிவாக சொல்லப்பட்டது என்றால் சரிதான்.

10) எனது தாயார் பெயரிலும், எனது மனைவி பெயரிலும் UDR பட்டா வழங்கப்பட்டுளளது என்றாலும் அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டால் சொத்தின் அளவுகள் தெரிந்துவிடும் என்பதால் UDR பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி, குறுக்கு விசாரணை ஒத்திவைக்க வேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு, குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.06 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/- S.Munusamy
Additional District Munsif(F.A.C), Attur

Typed by Selvi C.Sasikala - O.S. No.254/2015, Dt.24.02.2025.